بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுயல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 26/02/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலத்தில் நிகழ்ந்த போர்கள் மற்றும் வெற்றிகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டு வருகின்றது. இன்றும் அதையே எடுத்துரைப்பேன்.

அலீ பின் முஹம்மது மதாயினீ அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கால கட்டத்தில் ஹஸ்ரத் சயீது பின் ஆஸ் (ரலி) அவர்கள் ஹிஜ்ரி 30 ஆம் ஆண்டில் தபரிஸ்தானின் கோட்டையை வெற்றி கொண்டார்கள். அதேபோன்று ஹிஜ்ரி 31 -ல் 'ஸவாரி' வெற்றி கொள்ளப்பட்டது. ஹிஜ்ரி 31 -ல் 'ஆர்மீனியா' வெற்றி கொள்ளப்பட்டது. ஹிஜ்ரி 31 -ல் 'குராசான்' வெற்றி கொள்ளப்பட்டது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஆமிர் குராசானை நோக்கி புறப்பட்டார்கள். அவர்கள் அப்ரஹா, தூஸ், அபீவர்த், நஸாஹ் ஆகியவற்றை வெற்றி கொண்டார். எந்த அளவுக்கு என்றால் அவர் சரக்ஸை வந்தடைந்து விட்டார். ரோம் நகரை நோக்கி முன்னேறியது ஹிஜ்ரி 32 -ல் நிகழ்ந்தது. ஹிஜ்ரி 32 -ல் அமீர் முஆவியா அவர்கள் ரோம் நகரத்தாருடன் போரிட்டார்கள். எதுவரை என்றால் அவர் கான்ஸ்டன்டைனுடைய நுழைவாசல் வரை சென்றார்.

அபுல் அஷ்ப் சஅதி தனது தந்தையிடமிருந்து அறிவிக்கிறார்கள்: அஹ்நஃப் பின் கைஸ் அவர்கள் மர்வ்ரோஸ், தாலோகுவான், ஃபர்யாப், ஜோஸ்ஜான் ஆகிய நகர வாசிகளுடன் இரவின் இருள் வரை போரிட்டார்கள். இறுதியில் அல்லாஹ் எதிரிகளை தோல்வியால் சிதறடித்து விட்டான். ஹிஜ்ரி 32 -ல் 'பல்க்' வெற்றி கொள்ளப்பட்டது. அஹ்நஃப் பின் கைஸ் அவர்கள் மர்வ்ரோஸிலிருந்து பல்க் ஐ நோக்கி சென்றார்கள். மேலும் அங்கு சென்று பல்க்வாசிகளை முற்றுகையிட்டார். ஹெராத் யுத்தம் ஹிஜ்ரி 32 -ல் நடந்தது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் குலைத் பின் அப்துல்லாஹ் ஹனஃபி அவர்களை ஹெராத் மற்றும் பட்கிஸை நோக்கி அனுப்பினார்கள். அவர்கள் இவ்விரண்டையும் வெற்றி கொண்டார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கால கட்டத்தில் பாக்கிஸ்தான், இந்தியா ஆகியவற்றின் துணை கண்டங்களில் இஸ்லாம் வந்தடைந்து விட்டது. எகிப்தும் சிரியாவும் ஹஸ்ரத் உமர் அவர்களின் கால கட்டத்தில் வெற்றி கொள்ளப்பட்டன. ஆப்ரிக்கா, குராசான், மற்றும் சிந்த் ஆகியவற்றின் சில பகுதிகள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலத்தில் வெற்றி கொள்ளப்பட்டன. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கால கட்டத்தில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் முஅமர் அவர்களுக்கு ஒரு படைப் பிரிவைக் கொடுத்து மக்ரான் மற்றும் சிந்த் பகுதியை நோக்கி அனுப்பி வைத்தார்கள். மக்ரானின் வெற்றியில் அவர்கள் தமது வீரத்தை நன்கு வெளிப்படுத்தினார்கள். பின்னர் அதைச் சுற்றியுள்ள வெற்றி கொள்ளப்பட்ட பகுதிகளின் தலைமைத்துவம் அவர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டது. ஹஸ்ரத் முஜாஷிவு அவர்கள் தற்போதுள்ள ஆப்கானிஸ்தானின் தலை நகரமான காபூலில் இஸ்லாமிய படைப் பிரிவு ஒன்றை தலைமை தாங்கியவாறு இஸ்லாமிய எதிரிகளுடன் ஜிஹாது செய்தார்கள். ஹஸ்ரத் முஜாஷிவு அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின்

கால கட்டத்தில் பாக்கிஸ்தானின் மாநிலமான பலூசிஸ்தானில் இஸ்லாத்தின் எதிரிகளோடு போர் புரிந்தார்கள். மேலும் அதை ஒட்டியுள்ள பகுதியான சிஜிஸ்தானில் கொடியை பறக்க விட்டார்கள். அதற்குப் பிறகு முஸ்லிம்கள் துணைக் கண்டங்களின் இப்பகுதிகளில் வாழத் தொடங்கினர். இவற்றை தமது நாடாக கருதினர்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கால கட்டத்தில் தோன்றிய குழப்பங்களைக் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளும் உள்ளன. ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். "உஸ்மானே! ஒரு வேளை அல்லாஹ் உமக்கு ஒரு மேலங்கியை அணிவிக்கலாம். அந்த மேலங்கியை கழற்றுமாறு மக்கள் உம்மிடம் வேண்டினால் அவர்களின் பேச்சைக் கேட்டு அதை ஒருபோதும் கழற்றி விட வேண்டாம்."

ஹஸ்ரத் கஅப் பின் உஜ்ரஹ் அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு குழப்பத்தைக் குறித்து கூறினார்கள். அது அண்மையில் இருப்பதாக கூறினார்கள். அப்போது ஒரு மனிதர் அங்கு கடந்து சென்றார். அவர் தலையை மூடியிருந்தார். இவர் அந்த நாளில் நேர் வழியில் இருப்பார் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பாளர் கூறுகிறார். நான் ஏறிக் குதித்து சென்று அந்த மனிதரை பிடித்தேன். அவர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஆவார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாம் நோயுற்றிருக்கும் போது, எனக்கருகில் சில தோழர்கள் இருக்க வேண்டும் என நான் விரும்புகிறேன் எனக் கூறினார்கள். நாங்கள் அன்னாரிடம், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அபூபக்ரை தங்களிடத்தில் அழைத்து வரவா? எனக் கேட்டோம். அதற்கு அன்னார் அமைதியாக இருந்தார்கள். தங்களிடத்தில் உமரை அழைத்து வரவா? எனக் கேட்டோம். அன்னார் அமைதியாக இருந்தார்கள். பிறகு நாங்கள், தங்களிடத்தில் உஸ்மானை அழைத்து வரவா? எனக் கேட்டோம். அதற்கு அன்னார் ஆம்! என்றார்கள். ஹஸ்ரத் உஸ்மான் வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவருடன் தனிமையில் சந்தித்து பேசினார்கள். ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் முகம் மாறிக்கொண்டே சென்றது.

கைஸ் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் 'யவ்முத் தார்' அன்று, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்கு ஒரு விஷயத்தை வலியுறுத்திக் கூறினார்கள். நான் அதை நோக்கியே செல்கிறேன். اَنَاصَابِرٌعَلَيۡهِ நான் அதில் உறுதியாக உள்ளேன் என்று கூறினார்கள்.

'யவ்முத் தார்' என்பது, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை நயவஞ்சகர்கள் அவர்களது வீட்டில் சிறை பிடித்த நாளைக் குறிக்கும். அதன் பிறகு மிகவும் இரக்கமற்ற முறையில் அன்னாரை ஷஹீதாக்கினார்கள்.

**ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கால கட்டத்தில் கருத்து வேறுபாடுகளின் ஆரம்பமும், அதற்கான காரணங்களையும் குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) கூறுகிறார்கள்:**

ஹஸ்ரத் உஸ்மான் மற்றும் ஹஸ்ரத் அலீ, இந்த இரு சான்றோர்களும் இஸ்லாத்தின் ஆரம்ப கால தியாகிகளாக இருந்தனர். மேலும் அத்துடன் அவர்களின் தோழர்களும் இஸ்லாத்தின் மிகச் சிறந்த கனிகளாக இருந்தனர். அவர்களின் நேர்மை மற்றும் இறையச்சத்தின் மீது பழி சுமத்தப்படுவதென்பது எவ்வாறான விஷயம் என்றால், உண்மையில் இஸ்லாத்தின் மீது தலை குனிவை ஏற்படுத்துவதாகும். எந்தவொரு முஸ்லிமும் மெய்யான உள்ளத்துடன் இந்த உண்மையைப் பற்றி சிந்தித்தால், இம்மக்கள் உண்மையிலேயே எல்லா வித பிரிவினைகளை விட்டும் மேலானவர்கள்; உயர்ந்தவர்கள் என்ற முடிவுக்கு வந்தே ஆக வேண்டும். என்னுடைய ஆய்வைப் பொறுத்தவரை அந்த சான்றோர்கள் மற்றும் அவர்களுடைய தோழர்களைக் குறித்து கூறப்படுபவை அனைத்தும் இஸ்லாத்தின் எதிரிகளால் சித்தரிக்கப்பட்டவை ஆகும்.

கேள்வி என்னவென்றால், குழப்பம் எங்கிருந்து ஆரம்பமானது? ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் சில பித்அத்களை ஆரம்பித்து விட்டார். அதன் காரணமாக முஸ்லிம்களிடத்தில் கிளர்ச்சி உருவாகிவிட்டது என்று சிலர் கூறுகின்றனர். ஹஸ்ரத் அலீ அவர்கள் கிலாஃபத்திற்காக இரகசிய முயற்சிகள் செய்ய ஆரம்பித்து விட்டார். மேலும் தாம் கலீஃபாவாக ஆக வேண்டும் என்பதற்காக ஹஸ்ரத் உஸ்மான் அவர்களுக்கெதிராக எதிர்ப்பை உருவாக்கி அவரை கொல்லச் செய்து விட்டார் என சிலர் கூறுகின்றனர். ஆனால் இவ்விரு காரணங்களும் தவறாகும். இந்த குழப்பங்களுக்கான காரணங்கள் வேறு ஆகும். ஹஸ்ரத் உஸ்மான் ஹஸ்ரத் அலீ ஆகியோர் இவ்வாறான குற்றச்சாட்டுகளிலிருந்து முற்றிலும் தூயவர்கள் ஆவர். அவர்கள் முற்றிலும் பரிசுத்தமான மனிதர்களாக திகழ்ந்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) கூறுகிறார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் கிலாஃபத்தின் தொடக்க காலத்தில், ஆறு ஆண்டுகள் வரை எவ்வித குழப்பமும் நமக்கு தென்படுவதில்லை. இன்னும் சொல்வதென்றால், மக்கள் பொதுவாக அன்னாரிடம் மகிழ்ச்சியாக இருந்ததை நாம் அறிய முடிகிறது. ஆனால் ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு ஏழாம் ஆண்டில் ஒரு இயக்கம் உருவானது. அந்த இயக்கம் ஹஸ்ரத் உஸ்மான் அவர்களுக்கெதிராக உருவாகவில்லை. மாறாக சஹாபாக்களுக்கெதிராகவோ அல்லது சில கவர்னர்களுக்கெதிராகவோ உருவானது. தபரி அவர்கள் இது குறித்து கூறுகிறார்கள்: ‘ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் மக்களுடைய உரிமைகளை முழுமையாக கருத்தில் கொண்டார்கள். ஆனால் எந்த மக்களுக்கு இஸ்லாத்தினுடைய ஆரம்ப காலமும் துவக்க காலமும் கிடைக்கவில்லையோ அவர்களுக்கு ஆரம்ப கால முஸ்லிம்களுக்கு நிகராக சபைகளில் கண்ணியம் கிடைக்கவில்லை. அவ்வாறே ஆரம்ப கால முஸ்லிம்களுக்கு நிகராக அவர்களுக்கு அரசாட்சியில் பங்கு கிடைக்கவில்லை. அதே போன்று செல்வத்திலும் ஆரம்ப கால முஸ்லிம்களுக்கு நிகரான சம உரிமை கிடைக்கவில்லை. கொஞ்ச காலத்திற்குப் பிறகு சிலர் இதன் விளக்கம் குறித்து கேள்வி கேட்க ஆரம்பித்தனர்; இதை அநீதியாக கருதினர். ஆனால் அதே சமயத்தில் இவர்கள் முஸ்லிம் பொது மக்களைக் கண்டு அஞ்சவும் செய்தனர். மக்கள் தம்மை எதிர்ப்பார்கள் என அஞ்சி தமது எண்ணங்களை வெளிப்படுத்தாமல் இருந்தனர். இதற்காக இவர்கள் மேற்கொண்ட வழிமுறை என்னவென்றால், மக்களிடையே மறைவாக சஹாபாக்களுக்கெதிராக தூண்டி வந்தனர். படிப்படியாக இக்கூட்டத்தின் எண்ணிக்கை அதிகமானது. மிகப் பெரும் எண்ணிக்கையில் அது வளர்த்து விட்டது.

இந்த அனைத்து கிளர்ச்சிகளும் இரகசிய திட்டங்களின் விளைவாக இருந்தன. இதனுடைய உண்மையான தோற்றுனர்கள் யூதர்களாக இருந்தனர். உலக இச்சையில் மூழ்கிய, மார்க்கத்திலிருந்து வெளியேறிய சில முஸ்லிம்கள் அவர்களுடன் இணைந்து கொண்டனர். குழப்பத்தை விளைவிக்க விரும்பிய இவ்வாறான மக்களின் ஒரு சபை கூஃபாவில் கூடியது. அம்மக்கள் அனைவரும் ஒருமித்து ஒரே ஆலோசனையை கூறினர். அது என்னவென்றால், உஸ்மானுடைய ஆட்சி இருக்கும் வரை யாரும் தலையை உயர்த்த முடியாது என்பதாகும்.

உஸ்மானுடைய இருப்பு ஒன்று மட்டுமே கிளர்ச்சியிலிருந்து விலக்கி வைத்துக் கொண்டிருந்தது. சுதந்திரமாக தமது குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு அவரை இடையிலிருந்து அகற்றுவது அவசியமாக இருந்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) கூறுகிறார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் அக்குழப்பவாதிகளுக்கும் அழைப்பு கொடுத்தார்கள்; ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்களையும் ஒன்று திரட்டினார்கள். அனைத்து மக்களும் ஒன்று கூடிய பிறகு, அந்த மக்களிடம் அனைத்து நிலைமைகளையும் எடுத்துரைத்தார்கள்; குழப்பவாதிகள் எவ்வாறான குழப்பத்தை உருவாக்க முயல்கின்றனர் என்பதையும் எடுத்துக் கூறினார்கள். இதைக் கேட்ட சஹாபாக்கள் அனைவரும், அம்மக்களை கொன்று விடுங்கள் என மார்க்கத் தீர்ப்பு வழங்கினர். ஏனென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) கூறியுள்ளார்கள்: ‘இமாம்

இருக்கும்போது எவர் ஒருவர் தம்மை பின்பற்ற வேண்டும் என்றோ அல்லது இன்னொருவரை பின்பற்ற வேண்டும் என்றோ மக்களை அழைப்பாரோ அவர் மீது இறைவனின் சாபம் உண்டாகட்டுமாக! நீங்கள் அவ்வாறான மனிதரை கொன்று விடுங்கள்; அவர் யாராக இருந்தாலும் சரியே!'

ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் சஹாபாக்களின் இந்த மார்க்கத் தீர்ப்பை கேட்ட பிறகு, அவ்வாறன்று! நாம் அவர்களை மன்னிப்போம். அவர்களின் சாக்குப் போக்குகளை ஏற்றுக் கொள்வோம். மேலும் நமது அனைத்து முயற்சிகளினால் அவர்களுக்கு புரிய வைப்போம். ஒருவர் ஷரீஅத்தின் வரம்பை முறிக்காத வரை அல்லது நிராகரிப்பை வெளிப்படுத்தாத வரை நாம் எந்தவொரு மனிதரையும் எதிர்க்க மாட்டோம் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் சஹாபாக்களைப் பார்த்து கூறினார்கள்: இம்மக்கள் என்னைக் குறித்து, **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) பயணத்தில் குறைத்து தொழுது வந்தார்கள். ஆனால் நான் பயணத்தில் முழுவதுமாக தொழுதேன் என்று கூறுகின்றனர். எனினும், நான் மினாவில் மட்டுமே முழுவதுமாக தொழுதேன். அதுவும் இரண்டு காரணங்களின் காரணமாக. ஒன்று, அங்கு எனக்கு சொத்து இருந்தது. நான் அங்கு மணம் முடித்திருந்தேன். இரண்டாவது, அந்நாட்களில் மக்கள் எல்லா புறமிருந்தும் ஹஜ்ஜுக்காக அங்கு வருகை தந்ததாக நான் அறிந்தேன். கலீஃபா இரண்டு ரக்அத்துதான் தொழுதார்; ஆகவே தொழுகை இரண்டு ரக்அத்துதான் என அவர்களுள் அறியாதவர்கள் கூறக்கூடும். இது சரிதானே! என்றார்கள். நீங்கள் கூறியது சரியே! என சஹாபாக்கள் கூறினர்.**

பிறகு ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள், **உரிமை கொண்டாடப்படாத நிலங்களை அரசுடமையாக்கி ஒரு பித்அத்தை ஆரம்பித்துள்ளேன் என என் மீது ஆட்சேபனை கூறப்படுகின்றது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டும் தவறாகும். இந்த சட்டம் எனக்கு முன்பே விதிக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் உமர் அவர்கள் இதை ஆரம்பித்து வைத்தார்கள். சதகா ஒட்டகங்களின் மிகுதியால் நான் அதை விரிவுபடுத்தினேன். உரிமை கொண்டாடப்படாத நிலங்கள் எந்த ஒருவருடைய சொத்தும் ஆகாது. அது அரசின் நிலமாகும். அதில் எனக்கு எந்த இலாபமும் கிடையாது. இது சரிதானே! என்றார்கள். நீங்கள் கூறியது சரியே! என சஹாபாக்கள் கூறினர்.**

பிறகு ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள், **இளைஞர்களை நான் ஆட்சியாளர்களாக ஆக்குவதாக இவர்கள் கூறுகின்றனர். எவர்கள் நற்பண்புகளையும், நல்ல வழிமுறைகளையும் கொண்டுள்ளார்களோ அவர்களையே நான் ஆட்சியாளர்களாக நியமிக்கின்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஸாமா பின் ஸைது அவர்களை படைத்தளபதியாக நியமித்தபோது, இப்போது என் மீது செய்யப்படும் ஆட்சேபனையை விட மிகுதியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஆட்சேபனை செய்யப்பட்டது. இது சரிதானே! என்றார்கள். நீங்கள் கூறியது சரியே! என சஹாபாக்கள் கூறினர். சுருக்கமாக, ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் இவ்வாறு அனைத்து ஆட்சேபனைகளையும் ஒன்றன் பின் ஒன்றாக எடுத்துரைத்து அதற்கான பதில்களை கூறினார்கள்.**

அவர்களைக் கொன்று விட வேண்டும் என சஹாபாக்கள் அழுத்தம் கொடுத்துக் கொண்டே வந்தனர். ஆனால் ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் சஹாபாக்களின் இந்தக்கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த மக்களை விடுவித்து விட்டார்கள். குழப்பவாதிகள் எவ்வாறான மோசடி மற்றும் ஏமாற்றுக்களை செய்தார்கள் என்பதை இச்சம்பவத்திலிருந்து அறிந்து கொள்ளலாம். தற்காலத்தில் உள்ள ஊடகங்கள் மற்றும் பயண ஏற்பாடுகள் அக்காலத்தில் இல்லை. அறியாத மக்களை வழிகெடுப்பது அவர்களுக்கு எளிதாக இருந்தது. உண்மை என்னவென்றால், அவர்களிடத்தில் குழப்பத்திற்கு அறிவுப்பூர்வமான காரணம் ஒன்றும் இருக்கவில்லை. உண்மையும் அவர்களுடன் இல்லை; அவர்களும் உண்மையுடன் இல்லை. அவர்களின் அனைத்து நடவடிக்கைகளின் அடித்தளம் பொய்யும் புரட்டுமாக இருந்தது. உஸ்மானுடைய கருணை மட்டுமே அவர்களை காப்பாற்றிக் கொண்டிருந்தது. இல்லையென்றால், முஸ்லிம்கள் அவர்களை துண்டு துண்டாக்கியிருப்பார்கள். இவ்வாறான

**மக்களுக்கு விரைவில் தண்டனை அளிக்கப்படாவிட்டால் இஸ்லாமிய ஆட்சி தலை கீழாகி விடும் என்பதை முஸ்லிம்கள் கண்டுணர்ந்து கொண்டார்கள். ஆனால் உஸ்மானோ கருணையின் வடிவமாக திகழ்ந்தார்கள். எவ்வகையிலாவது இவர்களுக்கு நேர்வழி கிடைக்க வேண்டும்; இவர்கள் நிராகரிப்பில் மரணித்து விடக் கூடாது என்று ஹஸ்ரத் உஸ்மான் விரும்பினார்கள். ஹஸ்ரத் உஸ்மானின் கருணை, தயவை அவர்கள் கண்டார்கள். இவருக்கு நிகரான ஒருவர், இதுபோன்ற கருணை காட்டக் கூடிய ஒருவர் இக்காலத்தில் உலகின் திரையில் காணக் கிடைக்க மாட்டார் என்பதை ஒவ்வொருவரின் உள்ளமும் சாட்சியளித்தது. தமது பாவங்களுக்காக தவ்பா செய்வதை விட்டுவிட்டு இவர்கள் கோபத்திலும், ஆக்ரோஷத்தின் நெருப்பிலும் இன்னும் எரிந்து கொண்டே சென்றனர். பதிலளிக்க முடியாமல் போன தம் நிலையை தம்முடைய இழிவாகவும், ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் கண்டும் காணாமல் விட்டதை தம் அழகிய திட்டத்தின் விளைவு எனவும் கருதினர். மேலும் வரக்கூடிய காலத்தில் தம் மீதமுள்ள எண்ணங்களை நிறைவேற்றும் திட்டத்தைப் பற்றி சிந்தித்தவாறே இம்மக்கள் திரும்பிச் சென்றனர்.**

**இத்தொடர் இன்னும் தொடரும். இன்ஷாஅல்லாஹ்!**

குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள், இறைவழியில் உயிர் தியாகம் செய்த மதிப்பிற்குரிய அப்துல் காதிர் சாஹிப், இறைவழியில் கைதான மதிப்பிற்குரிய அக்பர் அலீ சாஹிப், மதிப்பிற்குரிய காலித் மஹ்மூதுல் ஹஸன் பட்டி சாஹிப் மற்றும் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா ரப்வாவின் சட்ட ஆலோசகரான மதிப்பிற்குரிய முபாரக் அஹ்மது தாஹிர் சாஹிப் ஆகியோரின் நற்குறிப்பை எடுத்துரைத்தார்கள். அவர்களின் பாவ மன்னிப்பிற்காக துஆ செய்தார்கள். மேலும் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு அவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைத்தார்கள்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللهِ رحمكم الله اِنَّ اللهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. **தாரிக் அஹ்மது**)